சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 25/2015

பெயர் திரு. பெருமாள் நாள்.13.02.2026
த/பெ.

**பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. துளசி ராமன் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவர் வீட்டு மனை பட்டா கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த சொத்தின் புல எண் 34/3. வழக்கு சொத்து கிராம நத்தம் ஆகும். வாதி பெயரில் உள்ள கிராமநத்த பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வாதியின் சகோதர சகோதரிகளின் பெயரில் உள்ள பட்டாவை நான் பார்த்தது இல்லை. வழக்கு சொத்து உள்ள ஊரில் கடந்த 25 வருடங்களாக இருந்து வருகின்றேன். எனக்கு ஆதார் அட்டை வழக்கு கிராமத்தில் உள்ளது அதை நான் இங்கு எடுத்துவரவில்லை. வழக்கு சொத்தில் வாதியின் கூரை கொட்டகை இல்லை என்றால் கிடையாது.

2. நான் அந்த ஊர் வழக்கு அல்ல என்றாலும் நான் அந்த கூரை கொட்டகையை இடித்து விட்டு தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் பெயர் ஜெயராமன். வாதியின் பாட்டனார் பெயர் தெரியாது. வாதி வழக்கு சொத்தை அனுபவம் செய்து வரும் விவரம் தெரியுமா என்றால் வாதி வழக்கு சொத்தை அனுபவம் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும்

புல எண் 215/3 ற்கான நத்தம் தூய சிட்டா நகல் என் பெயரில் உள்ளதா என்றால் அது நான் இல்லை. துரைசாமி மகன் கண்ணாயிரம், வெங்கட கிருஷ்ணன் மனைவி கஸ்தூரி மற்றும் சுப்பிரமணியின் மனைவி கிருஷ்ணவேணி என் உறவினர் என்றால் சரிதான்.

3. UDR ல் எனக்கும் என் உறவினர்களுக்கும் பட்டா கொடுத்தார்கள் என்றாலும், அச்சமயத்தில் வாதிக்கும் வழக்கு சொத்தை பொறுத்து பட்டா கொடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. துரைசாமி மகன் வேதாசலம் என் தகப்பனார். எனக்கும் என் உறவினர்களுக்கும் சேர்ந்து ஆறு பட்டா கொடுத்தார்கள் என்றாலும், அச்சமயத்தில் என்றால் வாதிக்கும் அச்சமயத்தில் கொடுத்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தை வாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் வழக்கு சொத்தை இடித்துவிட்டு புதிய வீடு கட்டும் போது நான்தான் தகராறு செய்தேன் என்று சொன்னாலும் சரியல்ல.

4. இங்கு காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் நான்தான். அந்த புகைப்படம் வ.த.சா.ஆ.5. அந்த புகைப்படம் வாதி தன் இடத்தை டிராக்ர் மூலம் சுத்தம் செய்யும் போது நான் தகராறு செய்தேன் என்றாலும், அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் என்றாலும் சரியல்ல. இது சம்பந்தமாக வாதி அளித்த புகாரின் பேரில் செய்யூர் காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

மதுராந்தகம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.385/2013 வழக்கு தாக்கல் செய்து அதில் வாதி 929/2014 எனும் மனு தாக்கல் செய்தது பற்றியும் எனக்கு தெரியும். தற்பொழுது வரை வாதிதான் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்கள் அனைத்தும் வாதி பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் வாதி UDR ல் தவறுதலாக மாற்றிக் கொண்டார்.

5. வழக்கு சொத்தில் நான்கு எல்லைகள் எனக்கு தெரியும். கிழக்கே நாகரத்தினம், தெற்கே கண்ணாயிரம், வடக்கே கஸ்தூரி மற்றும் மேற்கே அம்சா. அதன் மொத்த விஸ்திரனம் 35 சென்ட். மேற்படி நான்கு எல்லைகளின் புல எண் எனக்கு தெரியாது. நான் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் அடுத்தவர் கூறுவதை வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரை எதுவும் தெரியாது என்றாலும், வழக்குரை தவறு என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள எ பட்டியல் நான் கிரையம் வாங்கிய சொத்தாகும். பி.த.சா.ஆ. 1 ல் கண்ட புல எண்ணும், வழக்கு புல எண்ணும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. பி.த.சா.ஆ. 1 ல் கண்ட புல எண். பைமாஷ் எண் என்றாலும் அதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6. தாவா சொத்து வாதிக்கு உரிமையானது என்றாலும் நான் தான் தேவையில்லாமல் தகராறு செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி கூறியவாறு தீர்ப்பாக வேண்டுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை